# திருவருகைக்காலம் மூன்றாம் ஞாயிறு

## திருப்பலி முன்னுரை :

ஓர் ஊரில் குளிர்கால காலை வேளையில் முதியவர் ஒருவர் தன் வீட்டிற்கு வெளியே ரோஜா செடி ஒன்றை நட்டு வைத்துக் கொண்டிருந்தார். அவ்வழியே சென்ற ஒருவர் அதைப் பார்த்தார்.

பின்னர் அவர் மிகுந்த ஆர்வத்துடன், 'டிசம்பர் மாதத்தில் ரோஜாப்பூ பூப்பதில்லையே என்று தெரிந்தும் இவ்விடத்தில் ஏன் செடியை நடுகிறீர்கள்?' என்று கேட்டார். அதற்கு அவர் புன்னகை பூத்த முகத்துடன்,'அது உண்மைதான் ஆனால் ரோஜா பூக்கள் பூப்பதற்கான வசந்த காலம் ஒன்று வரும். அப்போது ரோஜாப்பூ பூத்துக் குலுங்குவதற்காக த் தோட்டம் தயாராக இருக்க வேண்டும் அல்லவா? அதற்குத்தான்

நான் இப்போதே தோட்டத்தை தயார் செய்து கொண்டிருக்கிறேன்' என்றார்.

இறை இயேசுவினல் என் அன்பு சகோதர சகோதரிகளே! நாம் இப்போது திருவருகைக் காலத்தில் மூன்றாம் ஞாயிறை சிறப்பித்துக் கொண்டிருக்கின்றோம். இது மகிழ்ச்சியின் ஞாயிறாகக் கொண்டாடப்படுகிறது. இன்று ஆரஞ்சு நிற மெழுகுவர்த்தி ஏற்றப்படுகிறது.

இயேசுவின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மக்களுக்கு நம்பிக்கையையும், மகிழ்ச்சியையும் அளிக்கின்ற காலம் இது. காத்திருப்பதில் கிடைக்கும் ஆனந்தமே தனி சுகம் தான். இன்றைய ஞாயிறு இறை வார்த்தை வழிபாடானது, நம் அனைவரையும் பாவமன்னிப்பு பெற்று ஒளிக்கு சான்று பகரக்கூடிய மகிழ்ச்சியான வாழ்வு வாழ அழைப்பு விடுக்கின்றது.

ஏசாயா கூறுவது போன்று, "பாலைவனம் சோலையாகும் ", அதாவது, ஆண்டவரின் பார்வையால் பாலைவனம் சோலைவனமாகும். அனைவரும் பஞ்சங்கள் நீங்கி மன நிறைவோடு வாழ்வர். நினைத்தவை நிறைவேறும் என்பதாகும். யாக்கோபு கூறுவது போன்று, விவசாயி விளைச்சலுக்காக காத்திருப்பது போல இயேசுவின் வருகைக்காக நாமும் பொறுமையுடன் காத்திருப்போம். திருமுழுக்கு யோவான் வரவிருப்பவர் நீர்தாமே? எனக் கேட்டு நம்மையும் சிந்திக்க அழைக்கின்றார். அமைதியான மகிழ்ச்சி, அமைதியான நம்பிக்கை

மற்றும் மிகுந்த எதிர்பார்ப்பு இவற்றை திருப்பலியின் வழியாக பெற்றுக் கொள்ள நாம் ஜெபிப்போம்.

**மறையுரை :**

மகிழ்ச்சியின் ஞாயிறு. "காத்திருப்பின் நடுவில் நோயாளி மகிழ்ச்சி" ஐரோப்பாவில் ஒரு சிறிய கிராமத்தில் ஒரு அற்புதமான பைப் ஆர்கன் உள்ள (pipe organ )நூற்றாண்டுகள் பழமையான தேவாலயம் ஒன்று இருந்தது. அது ஒரு காலத்தில் அங்குள்ள சரணாலயத்தை இசையால் நிரப்பி இருந்தது என்று கூறப்படுகிறது. அதன் பின், அது பல ஆண்டுகளாய் தூசி படிந்து சிதைந்து காணப்பட்டது. ஆர்கனில் உள்ள பட்டன்கள் சிக்கிக் கொண்டு குழாய்கள் துருப்பிடித்துப் போனதால் ஆலயத்தில் அமைதி நிலவியது.அம்மக்கள் ஆர்கன் இன்றியே பாடி பழகிவிட்டனர். நாளடைவில் அதுவும் அவர்களின் பழக்கமாகவே மாறிப்போனது.

துருப்பிடித்து பயனற்று கிடக்கும் ஆர்கனை பார்க்கலாமா? என்று வழிப்போக்கர் ஒருவர் ஒருநாள் அமைதியுடன் கேட்டார். அவர்கள் அனுமதி அளித்தவுடன் அவர் மாடிக்கு ஏறிச் சென்று ஆர்கன் முழுவதையும பல பகுதிகளாகப் பிரித்து பழுது பார்க்கத் தௌடங்கினார்.பார்த்தார். அவர் மூன்று நாட்கள் அமைதியாக இருந்து அந்த ஆர்கனின் பட்டன்களை சரி செய்து துருப்பிடித்தப் பகுதிகளை நீக்கி நன்கு துடைத்து சீரமைத்தார். மூன்று நாட்கள் எந்த ஓசையும் எழவில்லை.

நான்காம் நாள் மாலை திருப்பலியில் குருவானவர் அப்பத்தை உயர்த்திப் பாடும்போது ஆலயம் மீண்டும் இன்னிசையால் நிரம்பி மூழ்கியது. மக்களை நெகிழ்ச்சியூட்டி நடுங்க வைக்கும் ஆரவாரம் மிக்க உயிர்ப்புள்ள ஒளியால் அவ் ஆலயம் நிரம்பியது கண்டு மக்கள் ஆனந்த கண்ணீர் வடித்தனர்.

50 ஆண்டுகளுக்கு முன் அந்த ஆர்கனை வடிவமைத்தவர் அதே முதியவர் தான் என்பது பின்னர் தெரிய வந்தது. இந்நாளில் 50 ஆண்டுகளுக்குப் பிறகு அவர் திரும்ப வந்து அந்த இசைக்கருவியை மீண்டும் பழைய நிலைக்குகொண்டு வந்ததை நினைவு கூறுவதே இந்த மகிழ்ச்சியின் ஞாயிறு.

உள்ளங்கள் சுருண்டு நம்பிக்கை இழந்த இசைக் கருவியாக உணரப்பட்ட நம் ஆன்மாக்களை மீண்டும் பாட வைக்க இறைவன் அமைதியாக,சாந்தமாக நம்மிடையே மீண்டும் வருகின்றார்.

*1) "அமைதியின் நடுவில் தோன்றும் மகிழ்ச்சி":*

நீண்ட நாள் காத்திருப்பில் அமைதியால் வாழ்ந்த மக்களுக்கு நம்பிக்கையின் ஒளியாக இன்றைய வாசகங்கள் அமைகின்றன. இன்றைய முதல் வாசகத்தில், இறைவாக்கினர் ஏசாயா, "பாலை நிலம் லீவு போல் பூத்துக் குலுங்கும். பலவீனர்கள் வலிமை பெறுவர். துன்பத்தில் இருப்பவர்கள் பாடிக்கொண்டே சீயோன் வருவர்". என்கிறார். இது நம்பிக்கையற்று உள்ளத்தால் வறண்டு போன மக்களுக்கான செய்தி. கடவுள் என்னை மறந்து விட்டாரா? என்று கேட்பவர்களுக்கான நற்செய்தி.

திருமுழுக்கு யோவான் பாலைவனமாகிப் போன ஆன்மாக்களை அறிந்திருந்தார். ஒரு காலத்தில் சினம் மிக்கவராகவும் பயம் அற்றவராகவும் சிறையில் அடைக்கப்பட்டவராகவும் அறியாமையில் அடைக்கப்பட்டு இருந்த அவர் இயேசுவிடம் தூதர்களை அனுப்பி, "நீர் தாமோ வரவிருப்பவர்?" என்று கேட்டார். இது அவநம்பிக்கையால் பிறந்த கேள்வி அல்ல.

மாறாக தன்னால் முடிந்த அனைத்தையும் கொடுத்துவிட்டு, எந்த பலனையும் எதிர்பாராத மக்களின் மனமாற்றத்திற்கு அழைப்பு விடுக்கும் இறைவாக்கினரின் கூக்குரல் இது. இயேசுவின் பதில் என்ன?இது ஒரு நீண்ட உரையல்ல. ஆனால் ஒரு அடையாளம்.

நீங்கள் பார்ப்பதை யோவானிடம் சென்று சொல்லுங்கள். "குருடர்கள் பார்க்கிறார்கள், முடவர்கள் நடக்கிறார்கள், செவிடர்கள் கேட்கிறார்கள்". அதாவது யோவான் உங்கள் சிறைச்சாலையில் இருந்து நீங்கள் இந்த இசையை கேட்க முடியாமல் இருக்கலாம். ஆனால் மீட்பின் பாடல் ஏற்கனவே ஒலித்துக் கொண்டிருக்கின்றது.மகிழ்ச்சி என்பது,துன்பம் அற்ற நிலைமை அல்ல. நாம் அவருடைய குரலைக் கேட்க முடியாத போதிலும், கடவுள் செயல் படுகிறார் என்ற அமைதியான நம்பிக்கையே அது.

*2) "விவசாயின் மனநிலையோடு காத்திருப்பது" :*

இன்றைய இரண்டாவது வாசகத்தில் இதை யாக்கோபு சகோதர சகோதரிகளே!கடவுளின் வருகை வரை பொறுமையாக இருங்கள்.

விவசாயி மழையை எதிர்பார்த்துக் காத்திருப்பது போல நீங்களும் பொறுமையாக இருங்கள்.

ஒரு விவசாயி தன்னுடைய அறுவடையை ஒருபோதும் அவசரமாக செய்துவிட முடியாது. அவர் தண்ணீர் பாய்ச்சலாம், பயிரிடலாம், பாதுகாக்கலாம். ஆனால், விதை முளைப்பது கண்களுக்குத் தெரியாத மண்ணுக்குள் நடக்கும் ஒரு அதிசயம் ஆகும். பயிர் பூமிக்கு மேலே தோன்றுவதற்கு முன்பே விதை நிலத்தடியில் மடிந்து போகிறது.

அதேபோல் கடவுளின் இரக்கம் பெரும்பாலும் மறைமுகமாகவே உள்ளது. புனிதர்கள் கூறுவார்கள், "நீங்கள் கடவுளை உணர முடியாத வகையில் செயல்படுகிறார்". என்பது அதன் பொருளாகும்.

அந்த மௌனம் ஆகிவிட்ட இசைக் கருவியைப் போலவும், கண்ணுக்கு புலப்படாத பாலைவனத் தாவரங்கள் போலவும் நம் பார்வைக்கு அப்பாற்பட்டு ஏதோ ஒன்று நடந்து கொண்டிருக்கிறது. அப்படியானால், பொறுமை செயலற்றது அல்ல. குளிர்காலத்தில் இருந்தாலும் வசந்தகாலம் ஒன்று உதயமாகும் என்று உள்ளார்ந்த நம்பிக்கையை இது குறிக்கும்.

*3)" சாதாரண காத்திருப்பில் மறைந்திருக்கும் மகிழ்ச்சி" :*

ஒரு செவிலியர் ஒருமுறை தனது மருத்துவமனையில் மகப்பேறு வார்டில் நடந்த ஒரு நிகழ்வை அவர்களோடுப் பகிர்ந்து கொண்டார். அதாவது ஒவ்வொரு நாள் காலையிலும் எதிர்பார்ப்புடன் அமர்ந்திருக்கும் கர்ப்பிணி பெண்களைக் காண முடிந்தது. அமைதியாக அப்பெண்கள் தங்கள் வயிற்றில் கைகளைப் பற்றிக் கொண்டு காத்திருப்பதை கண்டேன்.

வலியில் சில நேரங்களில் பயத்தில் அவர்கள் இருந்தாலும் எப்போதும் அவர்கள் நம்பிக்கையுடன் இருந்தார்கள். ஒரு நாளும் அவர்களுடைய நம்பிக்கையில் அவர்கள் தளர்ந்து விடவில்லை. மேலும், செவிலியர் சொன்னார், 'நான் சந்தித்ததிலேயே மிகவும் பொறுமையான மக்கள் அவர்கள்தான். ஏனெனில் அவர்கள் வாழ்க்கைக்காக காத்திருக்கிறார்கள்.' அதாவது தனக்கு பிறக்க இருக்கும் குழந்தையை ஆவலோடு எதிர்பார்த்து காத்திருந்தார்கள்.

அதுதான் திருவருகைகால மகிழ்ச்சி. அது சுவாசிக்கிறது, அது கேட்கிறது, அது நம்புகிறது. திருவருகைக் காலம் என்பது பிறப்புக்காக காத்திருக்கும் ஒவ்வொரு தாயயின் மகிழ்ச்சியைப் போன்றது. திருவருகைக்கால மெழுகுவர்த்தியை ஒருவர் வைத்து மகிழ்வது

போன்றது. விண்ணகம் பதிலளிக்காமல் அமைதி காத்தாலும்,இறை நம்பிக்கையை இழக்காமல் இருப்பது போன்றது ஆகும்.

## *4. "மீட்பு தரும் மறுபிறப்பு"*

இரண்டாம் உலகப்போரின் போது இங்கிலாந்தில் ஒரு சிறிய தேவாலயம் குண்டு வீச்சால் சிதைந்தது.அதில் ஒரு சிலை மட்டும் அழியாமல் இருந்தது. சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் உருவம் உடைந்திருந்த அதற்கு இரண்டு கைகளும் இல்லை. சிலைக்குக் கீழே ஒரு பலகையில் கிறிஸ்துவுக்கு உள்ள கைகளை தவிர வேறு கைகள் இல்லை. 'எனக்கு கைகள் இல்லை,ஆனால் உங்கள் கைகளை என் கைகள் என்று எழுதப்பட்டுள்ளது' அதன் பிறகு அம்மக்கள் அந்த சிலையை மெழுகுவர்த்திகள் மற்றும் பூக்களால் அலங்கரித்து அதன் நினைவை கொண்டாடுவார்கள்.மகிழ்ச்சி என்பது நமக்கு மட்டுமானது அல்ல. மற்றவர்களுக்கும் அளிக்க வேண்டியது என்று தங்களுக்குள் நினைவுபடுத்திக் கொள்வார்கள்.

மகிழ்ச்சி என்பது நாம் எதற்காகவோ காத்திருப்பது போன்ற ஒரு உணர்வு அல்ல. மகிழ்ச்சியை பிறருக்கு வழங்க நாம் நம்மை தயார் படுத்திக் கொள்வது ஆகும். ஆறுதலளிக்கும் போதும், மன்னிக்கும் போதும் அல்லது சேவை செய்யும் போதும் இவ்வுலகம் மீண்டும் அந்த தெய்வீக இசையை கேட்கிறது. இதுவே மகிழ்ச்சியின் ஞாயிறு.

எனவே அமைதியுடனும், மகிழ்ச்சியுடனும் இந்த ஞாயிற்று கிழமையைக் கொண்டாடுவோம். நம் இல்லத்திலும் உள்ளத்திலும் இறைமகன் இயேசு பிறக்க நம்மை நாமே தயார் செய்வோம். ஆமென்.

**Translated into Tamil by Dr. Hilda Christiy, Chennai**